உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௭.]	பிரமாதி௵ மாசி௴	[பகுதி-௪.
Vol. 37.	February - March 1940.	No. 4.

பரதாழ்வான்வைபவம்.

[௮0-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

தசரதசக்கரவர்த்தி மிதிலையினின்றும் மணமக்களுடன் அயோத்திசென்றடைந்து, சுகவாழ்வுற்றிருக்குங்காலத்தில், கேகயர் கோன்விருப்பிற்கிசைந்து, பரதனைக் கேகயதேசம் போக்கக் கருதி, அவனைநோக்கிக் கூறிய செய்தியையும், அதுகொண்டு பரதாழ்வான் ஒழுகிய மெய்ந்நெறியொழுக்கவகைகளையும்சொல்லக் கருதிய மஹாகவி, அவற்றைப் பின்வரும் பாடல்களின்குறிப்பால் வெளியிடுகிறார். அப்பாடல்கள்,—

ஆணைநின் றன்முது தாதை யையநிற்
காணிய விழைவதோர் கருத்த னாதலாற்
சேணியில் வளமுறாற் கேக யம்புகப்
பூணொளிர் மார்பனீ போதி யென்றனன்.

ஏவலு மிறைஞ்சிப்போய் இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
ஆவியங் கவனல தில்லை யாதலால்
ஓவலி லுயிர்பிரிந் துடல்சென் றென்னவே.*

என்பன.

* பாலகாண்டம், பரசுராமப்படலம், செய்-47, 48.

இவற்றுள், முதற்பாட்டு யோகவிபாகம் என்னும் நூற்புணர்ப்புடையது.

யோகவிபாகமாவது.—ஒருசெய்யுளில் வேண்டுமளவான ஒரு பகுதியைப் பிரித்தெடுத்து ஒருமுறை பொருள்கொள்ளச்செய்து, பின்பு அச்செய்யுள்முழுதும் மறுமுறை பொருள்கொள்ளப் புணர்ப்பது. அல்லது, ஒருசெய்யுள்முழுதும் ஒருமுறை பொருள் கொண்டு, பின்பும் அச்செய்யுளின் வேண்டுமளவானபகுதியைப் பிரித்தெடுத்து மறுமுறையும் பொருள்கொள்ளப் புணர்ப்பதுமாம்.

இவற்றுள் முன்னதுகொண்டு முதற்பாட்டுப் பாடப்பட்டுள்ளது. அதனால், அப்பாட்டின் முதற்கண்நின்ற ஆணையென்ற சொல்லைப் பிரித்துநிறுத்திக்கொண்டு, 'ஐய! நின்முதுதாதை நிற்காணிய விழைவதோர்கருத்தனுதலால், நீ கேகயம்புகப்போதி', 'நீ கேணியில் வளைமுரல் கேகயம்புகப்போதி', 'பூணொளிர் மார்பன் நீ கேகயம்புகப்போதி' என்று ஒருமுறை பொருள்கொண்டு, பின்பு, ஆணை என்ற சொல்லையும் கூட்டி, முன்சொல்லியவாறே மறுமுறையும் பொருள்கொள்ளப்படும்.

"ஐய! நின் முதுதாதை நிற்காணிய விழைவதோர் கருத்தனுதலால், நீ கேகயம்புகப்போதி" என்றதன் கருத்து,—தசரதனும் பரதனும் தந்தையும் மைந்தனுமானநிலையில், தசரதன் அன்புடைமை தோன்றப் பரதனை ஐய! என அழைத்து, 'வயோதிகனாய் இங்குவரமுடியாதிருக்கும் உன் முதுதாதையை (தாய்வழிப் பாட்டனை) நீதானே விழைந்துசென்று காண்டல்வேண்டுமன்றே; அங்ஙனம் செய்தாயில்லை. நீ அவனைக் காணவிரும்பிச்செல்லாதிருப்பதையும் நினையாது, அவன் உன்னைக் காணவிருப்பமுடையவனாயிருப்பதால், அவனைக் கண்டு அளவளாவிவரவேண்டி நீ தப்பாமே கேகயதேயம் போகவேண்டும்:' என்பதாம்.

இதன்குறிப்பால், பரதாழ்வானுக்கு, அவன் அநுஷ்டிக்கும் மெய்ந்நெறியொழுக்கத்துக்கு உறுப்பாயுள்ள உடற்றொடர்பாகிய

புறப்பற்றின்மையும்* அதனுனே அவன், எல்லா உறவுமுறையும் பொருளும், ஆத்மபந்துவும் பரம்பொருளுமான இராமபிரானே என்று அவனையே பற்றியிருக்குமிருப்பும் பெறப்படும்.

'கேணியில் வளைமுரல் கேகயம்புகப் போதி' என்றதன் கருத்து,—அந்நாடு அரசிளங்குமரர்சென்று, புனல்விளையாட்டு பொழில்விளையாட்டு உண்டாட்டு முதலிய பலவகை விளையாட்டயர்தற்குமுரியதாய், நீர்வளம் நிலவளம் பொருந்தினமையால் சங்கினங்கள் முரலும் கேணிகளாலும் அக்கேணிகளையுடைய பூம்பொழில்களாலும் காண்டற்கினியதாயிருக்குமாதலால் உலகியலொழுக்கம் பழகிவரவேண்டியும் நீ கேகயம்புகுவாய் என்பதாம்.

இதன்குறிப்பால், இவன் ஐம்புலவின்பமும் ஆரத்துய்க்கும் உலகியலொழுக்கில் விருப்பமின்றியிருப்பவனென்பதும், அதனுல் அதனினும் சிறந்த பகவதநுபவத்தில் விருப்புடையனென்பதும் பெறப்படும்.

மஹாகவி, இக்கருத்துக்கொண்டே, இராமபிரான்வாக்காலே பரதாழ்வானை, 'இவ் வையமையல் தோன்றுநெறிவாழ் துணைத்தம்பி'† என்று கூறியிருப்பதும் இங்கு நோக்கத்தகும்.

'பூணொளிர் மார்பன்‡நீ போதி' என்றதன் கருத்து,—அக்கேகயமன்னனும் அந்நாட்டிலுள்ளோரும் நன்குமதிக்கும்படி

* உடற்றொடர்பாகிய புறப்பற்றாவது:—தாய் தந்தை முதலான உறவின் முறையாரை எம்மவர் என்றும், க்ருஹ ஆராம க்ஷேத்ர ராஷ்ட்ர தந வாஹநாதி சம்பத்துக்களை என்பொருளென்றும் அபிமானித்திருத்தல்.

† அயோத்திபாகாண்டம், நகர்நீங்குபடலம்—138.

‡ மார்பன் என்றது, குறிப்புமுற்று வினையெச்சமாய், பூணொளிர்மார்பினனாய்ப் போவாயாக எனப் பொருள்படுவதாயிற்று. இங்ஙனமன்றி, பூணொளிர்மார்ப! 'நீபோதி'யென்று தந்தபாடங்கொள்ளில், பூணொளிர் மார்ப! என்பது விளியாதல்வேண்டும். தசரதன் அங்ஙனம் பரதனை விளிப்பது பொருந்தாமையாலும், அதனுல் விதிப்பொருட்குச் சிறப்பின்மையானும், அது பாடமன்றென்று கொள்க.

வயிரகவசம் முதலிய பலவகையணிகலன்கள்பூண்டு, லௌகிக வேஷத்துடன் போவாயாக: என்பதாம்.

இதன்குறிப்பால் பரதன், உடலணிவிரும்பும் சரீராபிமான மின்மையால் யான் என்னும் அகப்பற்றில்லாதவன் என்பதும், அதனாலே வைதிகவேஷமும் உயிர்க்கணியாகிய ஆத்மகுணங்களும் நிரம்பினவன் என்பதும் பெறப்படும்.

இங்ஙனம் தசரதன்கூறியதுகேட்டும், பரதன் இராமபிரானை விட்டுப் பிரிந்துசெல்ல மனமில்லாதவனாய்த் தியங்கிநின்றான்; அந்நிலைகண்டு, அண்ணனும் தானும் போதற்கு அருள்புரியவேண்டும்: என்று பரதன் நினைந்தானென்று தெரிந்து, அதற்கு இசையாத தசரதன், தான் அரசனும் பரதன் அரசகுமாரனுமான நிலையில் நின்று, 'ஐய!' என்று மரபுபற்றி விளித்து, ராஜாஜ்ஞை என்று தோற்றுமாறு ஆணை என்ற சொல்லை முற்படக்கூறி, முன்பணித்தவாறே மறுமுறையும் பணித்தான்: என்பது யோகவிபாகப்புணர்ப்பின் மறுமுறையுரைக்கும் பொருளாம்.

இங்கு "நீ போதி" என்றதன் கருத்து,—அண்ணனும் நானும் போவோமென்று மன்றாடாதே; அவன் இங்கிருக்கவேண்டும்; நீ போ: என்று கட்டளையிட்டான் என்பதாம்.

அன்றியும், 'நின் முதுதாதை நிற்காணிய விழைவதோர் கருத்தனாதலால், அவன்போதல் தக்கதன்று; நீ போ:' என்று கட்டளையிட்டான் என்பதுமாம்.

'கேகயம் புகப்போதி' என்றதன் கருத்து,—பிறிதோரிடத்தும் புகாது கேகயம்போதி: என்பதாம்.

இவ்வாறு தசரதன் பரதனை அரசியலாணைவலிகொண்டு போக்கினான்: என்பதனைப் பின்னும் மந்தரைகூற்றினுள்,

"பாக்கியம் புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலன்கழ லரச னாணையாற்
றேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்"*

என்று வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு தசரதனிட்ட கட்டளையால் தந்தைபணி தலைமேற்கோடலும், அரசனாணை வழியொழுகுதலுமாகிய இரண்டு சாமாநியதர்மங்கள் ஒன்றுகூடிப் பரதன்செய்துவரும் ராம(பகவத்) ஸேவையாகிய பரமதர்மத்துக்கு இடையீடாகக் குறுக்கிட்டு நின்றன.

இந்நிலைகண்ட இவனுக்கு, இந்த ஸாமாந்யதர்மாநுஷ்டாநத்தால் ராம(பகவத்) ஸேவையை யிழப்பது தகுதியோ? அல்லது ராம(பகவத்) ஸேவையால் இந்த ஸாமாநியதர்மாநுஷ்டாநங்களை யிழப்பது தகுதியோ? என்று தர்மசங்கடமுண்டாயிற்று. அதனை நீக்கிக் கொள்ளவேண்டியவனாய்,

"ஏவலு மிறைஞ்சிப்போய் இராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்"

என்கிறார்.

இதனுள் "ஏவலும் இறைஞ்சிப்போய்" என்றது, தசரதன் கட்டளையிடும்பொழுதே பரதன், ஒரு அஞ்சலிசெய்து போய்விட்டான்: என்று பரதனுக்கு அப்போதுண்டான பரபரப்பைக் காட்டுகிறது. அதாவது,—இங்குச் சற்றுக் காலந்தாழ்த்தால் இராமபிரானிடம் புகவிடாது, உடனே தேர்கொணரச்செய்து, அரசியலாணைவலிகொண்டு தேரிலேற்றி, அரசன் நேரே கேகயதேயம்புகுவிப்பன் என்றெண்ணி, அங்ஙனம் நிகழாவண்ணம் உடனே இராமபிரானிடம்போயினான் (பரதன்) என்பதாம்.

* அயோத்தியாகாண்டம், மந்தரைசூழ்ச்சிப்படலம்—59.

இதனால், பகவத்ஸேவைக்கு விருத்தமான சாமாந்யதர்மாநுஷ்டாநங்கள் கைவிடத்தகுமென்னும் இம்மெய்ந்நெறியொழுக்க விசேடம் காட்டப்பட்டது. இதற்கு உதாரணம் ப்ரஹ்லாதாழ்வானிடம் காணலாம்.

'போய் இராமன் சேவடிப்பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்' என்றதன்கருத்து,—இவன் இராமபிரானிடம்போய்ப் பணிந்து, அரசனிட்ட கட்டளையை அறிவிக்க, அவனும் 'அப்படியே செய்'யென்று நியமிக்க, அந்நியமனங்கொண்டேபோயினான்: என்பதாம். இது, இங்கு இந்நிகழ்ச்சி நிகழ்தற்குரிய இடமும் இவனியல்பும்பற்றி அறியப்படும் குறிப்புப்பொருளாயிற்று.

இவன் செய்வனவும் தவிர்வனவுமாகிய காரியங்களையெல்லாம் இராமபிரான்செய்யும் நியமனத்துக்கு இலக்காக்கிக்கொண்டுசெய்யுமியல்பினன் என்பதை,

"ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரிச்
சாமிது சாதம்நின் னாணை சாற்றினேன்"*

என்பதனுள் தான்செய்யக்கருதிய எரிபுகும்செயலை அவன்செய்யும் ஆணைக்கு இலக்காக்கிக்கொள்ளுதலால் அறியலாம்.

இதனால், இவன் கேகயதேயம்போதலும் இராம (பகவத்) கைங்கரியமாயிற்று.

இங்கு, 'இராமன் சேவடிப்பூவினைச் சென்னியிற்புனைந்து போயினான்' என்றது, பணிதற்குறிப்போடு அவனிட்டகட்டளை தலைமேற்கொண்டு போயினான்: என்னும் பொருள் பயப்பதாயிற்று.

---

* அயோத்தியாகாண்டம், கிளைகண்டுநீங்குபடலம்—133.

அன்றியும், ஒரு சுபகாரியம் செய்யப்புகுவார் அக்காரியம் இடையூறின்றி இனிதுமுடிதற்பொருட்டு, அவரவர்க்குரிய காப்புக் கடவுளை, "சுக்லாம்பரதரம்" சொல்லிப் பூசித்து, அக்கடவுளடிகளிற் சாத்திய பூந்தொடர் களைந்து சென்னியிற் புனைந்துகொண்டே கருதிய காரியத்தைச் செய்வது உலகியல்; அம்முறையில் இவன் கருதிய காரியம் (பகவதாஜ்ஞாகைங்கர்யம்) இடையூறின்றி முடிதற்கு இராமபிரானைப் பாதபூஜைசெய்து, அப்பாதங்களிற் சாத்திய பூந்தொடரைச் சென்னியிற் புனைந்துபோயினன்: என்றும் பொருள் பயப்பதாயிற்று. இங்கு, சேவடி என்றது திருவடிநிலை எனினுமாம்.

இதனால், இம்மெய்ந்நெறியொழுக்கிற்குப் பிறிதொரு கடவுள் வழிபாடு உபாயமாகவேண்டாது, இது தானே உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கும் என்பதும் குறிப்பாயிற்று.

இப்பொருள்களையெல்லாம் வெளிப்படையாக விரித்துச் சொல்லுவது அலௌகிகமென்றெண்ணியே, மஹாகவி குறிப்பாற் கொள்ளுமாறு கூறினர். மஹாகாவியநடைகளில் கவி, தான்சொல்லக்கருதிய முக்கியப்பொருள்களை வெளிப்படையாகக்கூறாது குறிப்பாற்கொள்ளுமாறு கூறுவது சிறப்பாம் என்பதே கவிமரபான வழக்கு. இம்மரபுபற்றிய வழக்கை மேற்கொண்டு செல்வது இவர்க்கு இயல்பென்பதை இன்னும் பின்னும் பலவிடங்களிலும் காணலாம்.

இவ்வொழுகலாற்றின்குறிப்பால், பகவத்பரதந்த்ரராய், அவனிட்டகட்டளையேபற்றியொழுகும் இம்மெய்ந்நெறியொழுக்கமுடையார்க்கு, இடையிடையே இன்றியமையாத சாமாந்யதர்மாநுஷ்டாநங்கள் செய்யக்கடவனவாய் வந்து குறுக்கிடுமாயின், எற்றபெற்றி அவற்றையும் பகவந்நியமநத்துக்கு இலக்காக்கிக் கொண்டு, பகவதாஜ்ஞாகைங்கர்யமாகவே செய்துபோருவர் என்பது காட்டப்பட்டது.

இனி, இராமபிரானைவிட்டுப் பரதாழ்வான் பிரிந்துசெல்லும் செலவைச் சொல்லும் திறத்தாலும், இவ்வொழுகலாற்றின் இயல்பும், சேவ்ய சேவக ரிருவர்க்குமுள்ள சம்பந்தமும் காட்டவேண்டி,

"ஓவலி லுயிர்பிரிந் துடல்*சென் றென்னவே-போயினான்"

என்கிறார்.

இதன்பொருள்: ஒருநாளும் உடலைவிட்டுப்பிரியாத உயிர் பிரிந்துநிற்க, அப்படியே அவ்வுயிரை விட்டுப் பிரியாத உடல் பிரிந்துசென்றது: என்று தத்துவவித்துக்கள் சொல்லும்படி சென்றான் என்பதாம்.

என்ன என்னும் செயவெனெச்சத்துக்கு, தத்வவித்துக்கள் என்னும் வினைமுதல் தகுதிநோக்கி வருவித்துரைக்கப்பட்டது. இது வியப்புக்குறிப்பாயிற்று.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, உடம்போ டுயிரிடை நட்பு" என்று சொல்லும்படி உடம்பு பிரிந்துகிடக்க, உயிர்செல்லுமென்பதே உலகவழக்காயிருக்க, அதற்கு மாறாக,

---

* சென்று என்றது, "றவ்வொடுகரவும்மை நிகழ்பல்லவும்", என்பதனாலும், "துறுடுக்குற்றியலுகர வீற்ற ஒன்றன்படர்க்கை" என்பதனாலும், இறந்தகாலங்காட்டும் றுவ்வீறுபெற்ற ஒன்றன்பாற்படர்க்கைவினைமுற்றாய் ஒற்றுமைநயம்பற்றிப் பிரிந்து என்னும் உயிரின்வினைகொண்டு முடியநின்றது. சென்று என்பது ஒன்றன்படர்க்கைவினைமுற்றாகப் பயின்றுவாராமையால் சென்றது என்னும் வினைமுற்றே சென்று எனத் திரிந்துநின்றது எனினுமாம் இங்ஙனமன்றி, சென்று என்பதை வினையெச்சத்திரிபாகக்கொண்டு, உயிர் பிரிந்து உடல்சென்றாற்போலப் போயினான்: என அபூதவுவமையாக வைத்துப் பிரிதலருமைகாட்டினாரெனின், இங்குச் சொல்லப்படும் உயிரும் உடலும் பொருளாகவேயிருத்தலால் அவற்றிற்கு அவை உவமையாகாமையாலும் ஓவலிலுயிர் என்றமையாலும் அங்ஙனம் கொள்ளல் பொருந்தாதென்க.

"உயிர்பிரிந்துநிற்க உடல்சென்று (சென்றது) என்னவே போயி ஞன்" என்று சொல்லியது முரண்விளேவாயிற்று.

இம்முரண்விளேவிற்கு அழிவுகாட்டவேண்டி, பிரிதற்கு நிலேத் திணேயான வுயிரை ஓவலிலுயிர் என்று விசேடித்தார். ஓவல் - ஒழிதல்; நீங்குதலுமாம்.

ஓவலில்லாமையாகிய இவ்விசேடணத்தால் உடலேவிட்டு ஓவ லுடைய ஜீவான்மா விலக்கப்படும். ஜீவான்மா விலக்கப்படவே அச்சீவான்மாவின் வேருய் உயிர்க்குயிராய் ஒருகாலத்தும் ஓவாது உடனுறையும் பரமான்மாவே ஓவலிலுயிராயிற்று. ஆகவே அப்பர மான்மாவாகிய ஓவலில்லா உயிர்க்குச் சீவான்மாக்கள் ஓவலில்லா உடலாகும். இங்ஙனம் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் உயிரும் உடலுமாமெனக் கொள்வது வேதவழக்காயுள்ளது.

இங்ஙனம் ஓவலில்லாத உயிருடல்களுக்குத்தான் பிரிதல் எங்ஙனம் கூடுமெனில், அவ்வுயிருடல்களுக்கு அகநிலேயிற் பிரிதல் கூடாதாயினும், அவை புறநிலேயுற்று மூர்த்தீகரித்துநிற்கும்நிலேயிற் கூட்டமும் பிரிதலும் கூடுமாதலால், 'இராமபிராளுக மூர்த்தீகரித் துள்ள உயிர் பிரிந்து(நிற்க) அவ்வுயிர்க்கு உடலாயிருக்கும் சேதந ளுகிய பரதன் செல்லும் செலவு உயிர்பிரிந்து உடல்சென்ற செல வாயிற்று.

பரதன் இராமனேப் பிரிந்துசெல்லும் செலவை 'ஓவலி லுயிர் பிரிந் துடல்சென் றென்னவே' என்றதனேக் காரணங்காட்டி நிரூ பிக்கிருர், 'ஆவியங்கவனலதில்லேயாதலால்' என்று.

'ஆவியங்கு அவனலதில்லே' என்றதனுள், அங்கு என்ற விசே டணம் பரமான்மா மூர்த்தீகரித்து இராமபிராளுய்நிற்கும்நிலேயைச் சொல்லுதலால், 'ஆவியங்கவனலதில்லே' என்பதற்கு அங்ஙனம்

மூர்த்திகரிக்கிராது அகநிலையாயிருக்கும் பரமான்மா அப்பொழுது பிறிதொன்றில்லை என்பதாம்.

இதனால் பகவதவதாரஸேவை கிடைக்குமிடத்தில் அந்தராத்மஸேவை செய்யலாகாது: என்பதாம்.

இங்கு, இந்திரன் சரபங்கமஹாமுனிவரை ப்ரும்மலோகத்துக்கு வரும்படி அழைத்திருக்க, அவர் அதனை அற்பமென மறுத்துவிட்டதுமன்றி, அவர் தாம் நினைத்தபோது பகவத்பிராப்தியடையவல்லராயிருந்தும், அது செய்யாதே, பகவதவதாரரூபியான இராமபிரானை ஸேவிக்க விரும்பிநின்று ஸேவித்தபின்பு பகவத்ப்ராப்தியடைந்தமை நோக்கத்தகும்.

இவ்வொழுகலாற்றைத் தேவாலயங்களில்நின்றும் உத்ஸவமூர்த்தி புறப்பாடுகண்டருளும்போது அகநிலையாயுள்ள மூலஸ்தான மூர்த்தியிடம் சென்று ஸேவைசெய்யலாகாதென்பதுகொண்டும் காணலாம்.

இக்கருத்துட்கொண்டே மஹாகவி, விசுவாமித்திரமஹாமுனிவர்வாக்காலும், "காதலென்ற னுயிர்மேலும் இக்கரியோன்பாலுண்டு"* என்று காட்டினர்.

[யான், எனது: என்னும் இருவகைப்பற்றுமற்று முற்றத்துறந்த முனிவரர், யான் எனது என்ற சொற்களால் தம்முடலையும், அவ்வுடற்றொடக்குடைய பொருளையும் கூறாதலால், அவர் என்றன் உயிர் என்றது, அவர் தாமாகிய ஜீவான்மாவுக்கு உயிராயுள்ள பரமான்மாவையேயாம்.

அன்றியும், அவர் தாமாகிய ஜீவான்மாவில் தமக்குக் காதலுண்டு என்று கூறாதலாலும், அவர் காதலுக்கு இலக்காக என்ற

* பாலகாண்டம், குலமுறைகிளத்துபடலம்—29.

னுயிர் என்றது, அவர் தாமாகிய ஜீவான்மாவுக்கு உயிராயுள்ள பரமான்மாவையே என்றறியலாம்.

இக்கருத்துக்கொண்டு, அவர், "காதலென்றனுயிர்மேலும் இக்கரியோன்பாலுண்டு" என்றதற்கு, முனிவரர் தம் உயிர்க்கு உயிராயுள்ள பரமாத்மாவிடத்தில் தமக்குக் காதலுண்டென்றும், அக்காதலினும் மிக்ககாதல் இராமபிரானிடத்துண்டு என்றும் கூறினர் என்பது பொருளாம்.

இதனால், இவர் இராமசேவை கிடைப்பதற்குமுன்பெல்லாம் அவருயிர்க்குயிராகிய பரமாத்மஸேவையில் காதலுற்றிருந்தவரென்பதும், பின்பு இராமாவதாரஸேவை கிடைக்கவே, அப்பரமாத்மஸேவையினும் மிக்க காதலுடையவரானார் என்பதும், தோன்ற இராமாவதாரவைபவம் கூறினார் என்பதாம்.

விசுவாமித்திரமஹாமுனிவர்வாக்கில் இராமனைச் சுட்டி, 'இக்குரிசில்பாலுண்டு' என்னாது, "இக்கரியோன்பாலுண்டு" என்றதன் கருத்து,—ஸர்வஸாக்ஷி (கரி)யாயிருத்தலால் அந்தராத்மாவான அக்கரியோனே கட்புலனாகமூர்த்திகரித்தற்கு இன்றியமையாத நிறப்பண்புகொண்டு இக்கரியோனான இராமபிரானாக மூர்த்திகரித்தான்,—என்பதாம்.

அன்றியும், எனக்குப் பிராணபதமாய்த் திருமாலாயுள்ள அக்கரியோனிடத்துள்ள காதலினும், அவ்வவதாரமூர்த்தியாய் இக்கரியோனாயுள்ள இராமபிரானிடத்து மிக்க காதலுண்டு: என்றார் என்பதுமாம்.

இராமபிரானிடத்து இவர்க்கு மிக்க காதலுண்டு: என்பதை "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்"* என்று இவர் முன்னுங் காதற்குறிப்பாற் கூறியிருப்பதுகொண்டும் கண்டுகொள்க.]

* பாலகாண்டம், தாடகைவதைப்படலம்—24.

இன்னும் இராமனும் பரதனும் உயிரும் உடலுமாயுள்ளவர்கள் என்ற குறிப்பால், உயிர், உடலைத் தன்வயங்கொண்டு அதனை என்னது என்று அபிமானித்துப் பேணிவருவதுபோல, இராமபிரானும், பரதனைத் தன்வயங்கொண்டு, அவனை என்னவன் என்று அபிமானித்துப் பேணிவருபவன் எனவும், உடல் தன்வயமின்றி, உயிரின்வயத்ததாய்த் தன்பொருட்டன்றி அவ்வுயிரின்பொருட்டே தொழிற்பட்டுழைப்பதுபோல, பரதனும் தன்வயமின்றி, இராமபிரான்வபமாய்த் தன்பொருட்டன்றி அவன் பொருட்டாகவே பணிவிடைபுரிபவன் எனவும் இறைவனும் அடியனுமாயொழுகும் இம் மெய்ந்நெறியொழுக்கம் இயலுமாறும் காட்டப்பட்டதாயிற்று.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

கம்பராமாயணசாரம்.

[கூஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி]

82 மலரின்மே லிருந்த வள்ளல் வழுவிலா[1] வரத்தி னானீ[2]
உலைவிலாத் தருமம் பூண்டா யுலகுள தனையு முள்ளாய்[3]
தலைவனீ யுலகுக் கெல்லா முனக்கது தக்க தேயால்
புலையுறு[4] மரண மெய்தல்[5] லெனக்கிது[6] புகழ தேயால்[7].

தொண்டுகூட்டு: மலரின்மேல் இருந்த வள்ளல் வழுவிலா வரத்தினால் நீ உலைவிலாத் தருமம் பூண்டாய், உலகு உளதனையும் உள்ளாய், உலகுக் கெல்லாம் தலைவன், நீ. அது உனக்குத் தக்கதே. புலை உறும் மரணம் எய்தல் (ஆகிய) இது எனக்குப் புகழதேயால்.

பொருள்: பிரமதேவன் (அருளிய) வரத்தினால் நீ அழிவிலாத தருமத்தை மேற்கொண்டாயானாய்; சிரஞ்சீவியாயுள்ளாய். நீ (இராமனைச்சார்ந்ததனால்) உலகமுழுதுக்கும் தலைவனாவாய். அது (இவ்வாறெல்லாம் ஆவது) உனக்கு மேன்மையாம் (இராவணனை நீங்காதிருந்து அவனுக்காக) மரணமடைதல் ஆகிய இது எனக்கு மேன்மையாம்.

வழு - தவறு. உலகு உள தனையும் - உலகுள்ளமட்டும். புலை - இழிவு; தீயநெறியுடையானைக் குறித்தது. 'புகழது' என்பதில், 'அது' பகுதிப் பொருள்விகுதி. தெய்வநெறியில் ஒழுகித் தீர்க்காயுசுடையனாய் (இராமனைச் சார்ந்திருந்து) உலகத்துக்கு ஏகாதிபதியாதல் விபீடணனுக்குத் தக்கதென்றும், இராட்சசமுறைப்படி வாழ்ந்து, இராவணனை நீங்காதிருந்து, அவனுக்காகப் போர்புரிந்து அற்பாயுசுடையனாய் மரணமடைதல் தனக்குத் தக்கதென்றும் கும்பகருணன் கூறினானென்பது கருத்து.

பாடபேதம்: [1] மழுவலான். [2] வரத்தினாலே. [3] ஆயுப்பெற்றாய், [4] புலையறு. [5] மேனும். [6] எமக்கது. [7] புகழு மேயால்.

83 கருத்திலா விறைவன்[1] றீமை கருதினு[2] லதனைக் காத்துத்
திருத்தலா மாகி னன்றே[3] திருத்தலாந்[4] தீராதாயின்[5]
பொருத்துறு பொருளுண் டாமோ[6] பொருதொழிற் குரிய ராகி[7]
ஒருத்தரின் முன்னஞ் சாத லுண்டவர்க் குரிய தம்மா.

கொண்டுகூட்டு: கருத்து இ(ல்)லா(த) இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத் திருத்தலாமாகினன்றே, திருத்தலாம். தீராதாயின், பொருத்துறு பொருள் உண்டாமோ? (உண்டு. அது,) ஒருத்தரின்முன்னம் போர்த்தொழிற்கு உரியராகிச் சாதல். (அது) உண்டவர்க்கு உரியதே.

பொருள்: (நன்மைசெய்தால் நன்மைவிளையும், தீமைசெய்தால் தீமைவிளையுமென்ற) விவேகமில்லாத தலைவன் தீயசெயலைச் செய்யக் கருதினானேயானால், (அவனைச்சார்ந்துள்ளவர்கள்) அந்தத் தீச்செயலை அவன் செய்யாமல் தடுத்து, அவனைத் திருத்தக்கூடுமானாலல்லவா திருத்தலாம். திருத்த முடியாதானால், (அவர்கள் செய்தற்குப்) பொருத்தமான காரியமுண்டோ? (என்றால், உண்டு: அது யாதெனில், கூறுகின்றேன். அது அந்தத் தலைவனைச் சார்ந்தவர்) யாரொருவருக்கும் முன்னதாகத் தாம் போர்த்தொழிற்குரியராகி (அவர் யாரொருவர் சாதற்கு முன்னதாக)ச் சாகுதலை; (அது, அத்தலைவன்சோற்றை) உண்டவர்க்கு உரிய செயலாம்.

கருத்து - விவேகம் - பகுத்தறிவு. இறைவன் - தலைவன். காத்து - தடுத்து. தீராதாயின் - முடியாதானால். பொருத்துறு - பொருந்தச்செய்கின்ற - பொருத்தமான. உறு - துணைவினை. பொருள் - காரியம். பொரு - போர்செய்கின்ற. அம்மா அசைச்சொல். உண்டவர்க்கு - (சோற்றை) உண்டவர்களுக்கு. திருத்தலாமாகினன்றே திருத்தலாம் - திருத்தலாமானாலல்லவா திருத்தலாம்; திருத்தலாமானால் நன்றாகத் திருத்தலாம். ஒருத்தரின்முன்னம் - (யார்) ஒருவருக்கும் முன்னாக - எல்லாருக்கும் முன்னாக.

தலைவனைத் திருத்தத்தவறியவர்களுக்குச் செய்தற்குப் பொருத்தமான காரியம் உண்டோ? (என்றால்) போர்செய்து தம் தலைவனுக்குமுன் சாகுதலான காரியம் உண்டு. (அதுவே செய்தற்கு) உரியது என்றும் பின்னிரண்டடிகளுக்குப் பொருள்கூறலாம்.

பாடபேதம்: [1]விரைவின். [2]கருத்தினால். [3]ஆகி னன்றோ, ஆகி லொன்றோ, ஆகி லன்றோ, ஆகி லன்றே. [4]திருத்துக, திருத்துதல். [5]திருந்தா னாயின், தீரா தென்னின். [6]பொருத்தலாம் பொருள்வே றுண்டோ, பொருந்துறு பொருளுண் டாமே.[7] பொருத்துக பொருத்தா னாகில், போர்த் தொழிற் குரிய ராகி, பொருதொழிற் குரிய ரான.

84 தும்பி[1]யந் தொடையல் வீரன் சுடுகணை[2] துரப்ப[3]ச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் காண[4] ஒருவன்மூ வுலகை[5] யாண்டான்
தம்பியை யின்றி[6] மாண்டு கிடப்பனோ[7] தமையன் மண்மேல்.

கொண்டுகூட்டு: ஒருவன் மூவுலகை ஆண்டான் (ஆக வுள்ளவன்) தமையன், தும்பி அம் தொடையல் வீரன் சுடுகணை துரப்ப, சுற்றும் வெம்பும் வெம் சேனையோடும் வேறுள கிளைஞரோடும் மாண்டு, உம்பரும் பிறரும் காண, மண்மேல், தம்பியையின்றிக் கிடப்பனோ?

பொருள்: முன் ஏகசக்ராதிபதியாய் மூன்றுலகங்களையும் அரசாண்டவன், தமையனாகவுள்ளான், (இப்போது) இராமன் அம்புகளை ஏவ (அதனால் தன்னைச்) சூழ்ந்த படைவீரர் சுற்றத்தாரோடு மாண்டு வானவர்களும் மற்றவர்களும் காண, மண்மீதே தம்பியில்லாமல் (தனியே) கிடப்பானாகலாமோ?

தும்பி அம் தொடையல் - வண்டுகள் (மொய்க்கின்ற) அழகிய (மலர்) மாலை. கணை - அம்பு. துரப்ப - எய்ய. கிளைஞர் - உறவினர். உம்பர் - தேவர்.

போர்க்களத்தில் இறந்துகிடக்கும் இராவணனைச் சூழ, உயிர் துறந்துகிடக்கும் உறவினருள் உடன்பிறந்தாரல்லா ரெல்லாரும் உளராக, உடன்பிறந்தானொருவனில்லாமை குறைவாம். அது நேராமல் நான் இறப்பேனென்று கும்பகருணன் கூறினானென்பது கருத்து.

ஒரு தம்பியும் இல்லாத ஒருவன், போர்க்களத்தில் இறந்துகிடக்கும்படி நேர்ந்தபோது, தம்பியில்லாமற் கிடத்தல் இயல்பு. இரு தம்பியரையுடைய இராவணன் அவ்வாறு கிடத்தல் தகாததென்பான், அவனை மூவுலகையாண்டான் என்று கூறினதோடமையாமல் 'தமையன்' என்று சுட்டினான். இதனால் 'தமையன்' என்றது வெறும் விவரணமன்று, ஒரு குறித்த கருத்தைப் புலப்படுத்தப் பிரயோகிக்கப்பட்ட சிறப்புடை விவரணமாமென்பது தெரியத்தக்கது.

'இதுவும் அடுத்த கவியும் இராவணனைத் தனித்து மாளுமாறுவிடுதல் எனக்குத் தகுதியன்றென்று கும்பகருணன் கூறுவதைத் தெரிவிக்கும்.'

பாடபேதம்: [1] தும்பை. [2] சரம். [3] துணிப்ப, தொலைப்ப, துடைப்ப, சுளிப்ப, துணிக்க. [4] காணு, போற்ற. [5] மூன்றுலகை. [6] தம்பியரின்றி, தம்பியை யன்றி. [7] கிடப்பதோ.

85 அணையின்றி[1] யயர்ந்த[2] வெற்றி யஞ்சினர் நகைசெய் தார்க்கப்[3]
பிணையொன்று கண்ணாள் பங்கன் பெருங்கிரி நெருங்கிப்[4] பேர்த்த
பணையொன்று திரடோள் கால பாசத்தாற் பிணிப்பக் கூசித்[5]
துணையின்றிச் சேற லன்றே தோற்றுளா[6] கூற்றின் சூழல்.

கொண்டுகூட்டு: 'பிணை ஒன்று கண்ணாள் பங்கன் பெருங்கிரி நெருங்கிப் பேர்த்த பணை ஒன்று திரள்தோள்(களைக்) காலபாசத்தால், அணை இன்றி அயர்ந்த வெற்றி(யினால்) அஞ்சினர் (ஆன பகைவர்) நகைசெய்தார்க்க,(காலதூதர்)பிணிப்ப (இராவணன்) கூசித் தோற்றுளகூற்றின்சூழல் துணையின்றிச் சேறல் நன்றோ?

பொருள்: 'கயிலாயமலையைப் பேர்த்த தோள்களைக் (காலதூதர்) காலபாசத்தினாற் கட்டக் கட்டுண்டவனாய்த் தனக்கு முன் தோற்ற யமனிருக்குமிடத்துக்குத் துணையில்லாமற் செல்லுதல் நல்லதோ?

அணையின்றி அயர்ந்த வெற்றி அஞ்சினர் - தடையில்லாமற் பெற்ற வெற்றி(யினால்) அஞ்சினர் (ஆன பகைவர்). நகைசெய்து ஆர்க்க - (இராவணன்தோள்கள் காலபாசத்தினாற் கட்டப்படுதலைக் கண்டு பரிகசித்துச்)

சிரித்து(ச் சந்தோஷ) ஆரவாரஞ்செய்ய. பிணை ஒன்று கண்ணாள் - மான் போன்ற கண்களையுடையவள் (ஆன பார்வதி). பணை ஒன்று திரள் தோள் - (இராவணனுடைய) மூங்கிலையொத்த (இருபது) திரண்டதோள்கள். ஒன்று, உவமவுருபு (-ஒப்புமைகுறிக்குஞ்சொல்). உவமவுருபும் உவமவாசகமும ஒருபொருள்குறித்தவை. கூசி - அஞ்சி, நாணி; இங்கே இருபொருளும் பொருந்துதல் காண்க. துணை - தம்பி; துணையாளி. சேறல் - செல்லுதல். தோற்று உ(ள்)ள - தோற்றிருக்கின்ற. கூற்றின்சூழல் - எமனுடைய இடம்.

இராவணன் இறந்து இயமனிடம் போம்போது, தான் துணையாகப் போதல் கடமையென்பதைக் குறிப்பித்தான் கும்பகருணன்.

பாடபேதம்: [1] அன்றி. [2] உயர்ந்த. [3] நகையது ஆக. [4] நெருங்க. [5] தம்முன். [6] தோற்றுழல், தோற்றுறும்.

86 செம்பிட்டுச் செய்த விஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரிய லென்[1]முன் னுயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ டைய
தும்பிட்டு வாழ்கிலே னியான்[2] கூற்றையு மாடல் கொண்டேன்.

கொண்டுகூட்டு: ஐயா! செம்பு இட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வம் தேறி, வம்பு இட்ட தெரியல் என்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்திக் கும்பிட்டு, அம்பு இட்டுத் துன்னங்கொண்ட புண் உடை. (ய) நெஞ்சோடு யான் வாழ்கிலேன்; கூற்றையும் ஆடல்கொண்டேன்.

பொருள்: (நிலையாத) இலங்கைச்செல்வத்தை (நிலையான தென்று) நம்பி, (அந்தச் செல்வத்தைக் கொடுத்ததற்காக) என் தமயனைக் கொன்ற பகைவனை (வெளியாகத்) தோத்திரித்துக் கும்பிட்டுக்கொண்டு (உள்ளாக, என் தமையனைக் கொன்றவனென் பதை நினைந்து) புண்பட்டாற்போலத் துன்புறும் நெஞ்சினோடு நான் வாழமாட்டேன். எமனையும் வென்றேன் (ஆன யான் அப்படிப் பட்ட இழிந்த வஞ்சகவாழ்வு வாழ்வேனோ!)

செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர் - செம்பினாற் செய்த மதிலை யுடைய அழகிய நகரம் (ஆன இலங்கை). தேறுதல் - நம்புதல். வம்பு - வாசனை: வம்பிட்ட - வாசனைபொருந்திய. 'இட்ட', எதுகையில் நிற்றல் பற்றிப் 'பொருந்திய' என்ற பொருள்தந்தது. தெரியல் - மாலை. என் முன் - என் தமையன் - இராவணன். பகை - பகைவன் - இராமன். வாழ்த்தி - தோத்திரஞ்செய்து. அம்பிட்டு - அம்புதைத்து. இட்டு, எதுகை யில் நின்று, 'தைத்து' என்ற பொருள் பயந்தது. 'மாடு கொம்பிட்டுக் குத்தியது' என்பதில் 'கொம்பிட்டு' 'கொம்பினால்' எனப் பொருள்படல் போல, 'அம்பிட்டு' 'அம்பினால்' எனப் பொருள்பட்டதெனலாம். துன்னம் - கிழிவு.

இராவணனுக்காகப் போர்செய்யாமல் அவனைக் கைவிட்டு, இராமனை அணுகி, இராமன் செயித்துக்கொடுத்த இலங்கையைப்பெற்று வாழ்பவனுக்கு அம்பு தைத்து நெஞ்சு புண்ணாகுதற்குக் காரணமில்லையாதலால், அம்பிட்டுத் துன்னங்கொண்ட புண் உடை நெஞ்சு என்பதற்கு 'அம்புதைத்துக் கிழிப் புண்டு புண்ணுற்றாற்போன்ற நெஞ்சு', அதாவது, 'இராமன் இராவணனைக் கொன்றதற்காக அவனை வெறுத்து வருந்தும் நெஞ்சு' என்று பொருள் கொள்ளல் பொருத்தமானது.

இதன்முன் சாத்துவிதகுணமுடையவனாய் இராமனை மதித்துத் துதித்த கும்பகருணன் இப்போது அக்குணம்நீங்கி 'இராமனைத் தோத்திரம் செய்து வாழேன்' என்றான். இனி, இராசதகுணம் மேலிடலாகி உச்சநிலையை அடைய, அவன், அநுமசுக்கிரீவாதியரையே யன்றி இராமலக்குமணரையும் அதமாக்கிவிடுவேனென்று வீரவாதம் பேசுவதும் அந்த ராசதகுணம் சிறிது தணிய, அவன், இராமலக்குமணரல்லாத எல்லாரையும் கொல்லாதுவிடே னென்பதும் இயல்பாயும் இனிமையாயுமிருத்தல் கவனிக்கத்தக்கது.

பாடபேதம்: [1] எம். [2] வாழ்கி லேனக், வாழ்கி லேனான்.

['அநுமன் சுக்கிரீவன் அங்கதன் நீலன் சாம்பன் முதலிய படைத்தலைவர்களையேயன்றி இராமலக்குமணரையும் வானரசேனை யோடு அடங்கப் பொருது தொலைத்துப் பனியை நீக்கிப் பூமியைச்

சுற்றும் சூரியன்போல, யான் (யுத்தகளத்தைச்) சுற்றித் திரிதலைப் பார்ப்பாய். ஆலகாலவிடத்தைக்கண்டு தேவர்களோடியதுபோல என்னைக்கண்டு பயந்து வானரவீரர்கள் ஓடுவதையும், நான் சூலாயுதனாய் நிராயுதவானரசேனையைத் தொடரும்தோற்றம், ஒரு சூலமேந்திய கடல், வெற்றுக்கடலொன்றைத் தொடரும் காட்சி போல்வதையும், என் வேகத்தால் கடலும் காற்றும் நெருப்பும் தத்தம் நிலைகெட்டோடுவதையும், உலகமே யுகாந்தகாலத்து உலகம்போல நிலைகெட்டுக் குலைவதையும் பார்ப்பாய். ஓடிப்பிழைத்துப் போகாமல், எதிரிகள் ஒருகால் எதிர்வாராஞல், அவருள் இராமலக்குமணரல்லாத எல்லாரையும் உயிர்நீங்கிக்கிடக்க விடுவேனேயன்றி உயிர்தாங்கி நடக்கவிடேன். என் சொல்லைக் கேட்பாயானல், தாமதியாமல் இராமலக்குமணரிடம் திரும்பிப் போய்ச் சேர்வாயாக. இனி, என்னோடு பேசுவதனல் யாதொரு பயனும் பெறமாட்டாய். நீ, நாங்கள் இறந்தபோது, இராமன் இசைவுபெற்று, எங்களுக்கு ஈமக்கடன்செய்து எங்களை எரிவாய் நரகம் அடையாதபடி காப்பாயாக. யார் தடுத்தாலும் ஆவது ஆயே தீரும், போவது போயேதீருமென்ற உண்மையை உன்னினும் தெளிவாக உணர்ந்தவரொருவருமில்லை. போ; எங்களைக்குறித்து இரங்கல்வேண்டாம்' என்று கும்பகருணன் கூறினன்.]

87 என்றவன் றன்னை மீட்டு மெடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி நிறைகணல் நெடிது[1]நோக்கி
இன்றொடுந் தவிர்ந்த தன்றே யுடன்பிறப் பென்று விட்டான்
வென்றிவேந் திறலி ஞனு மவனடித் தலத்து வீழ்ந்தான்.

கொண்டுகூட்டு: என்று, அவன், தன்னை மீட்டும் எடுத்து மார்பு இறுகப்புல்லி, நின்றுநின்று, இரங்கி, ஏங்கி, நிறைக(ண்)ணல் நெடிதுநோக்கி, 'உடன்பிறப்பென்பது இன்றொடும் தவிர்ந்ததன்றே' என்று விட்டான். வென்றிவெந்திறலினனும், அவனடித்தலத்து வீழ்ந்தான்.

பொருள்: கும்பகருணன், விபீடணனை வாரியெடுத்து மார்போடு இறுகத் தழுவி(த் திரும்பச் சந்தியாத பிரிவுநேர்ந்ததே யென்றெண்ணி) நெடுநேரம் இரங்கி, ஏங்கி(க் கண்ணீர்) நிறைந்த கண்ணினால் நீண்டபொழுது நோக்கி, (நமக்கு) 'உடன்பிறப்பு (என்ற தொடர்பு) இன்றோடு கழிந்ததே' என்று கூறி(த் தழுவுதலை) விட்டான். (விட்டவுடன்) விபீடணன் அவன் பாதங்களில் விழுந்தான்.

மீட்டும் - திரும்பவும். இரங்கல் - அழுதல். தவிர்ந்தது - நீங்கியது. வென்றி - வெற்றி. வெம் திறல் - கொடிய வலிமை. 'வென்றி வெந்திறல்' என்பதற்கு வெற்றி (அளிக்கும்) மிக்க வலி யென்றும் பொருள்கூறலாம்.

கும்பகருணன் விபீடணனை வரவேற்றபோது வாரியெடுத்து மார்போடிறுகத்தழுவியதுபோல விடைகொடுத்தனுப்பும்போதுஞ் செய்தானென்பது புலப்பட, 'அவன் தன்னை மீட்டும் எடுத்து மார்பிறுகப்புல்லி' என்றார்.

அன்புமிகுந்தபோது தமையன் தம்பியைத் தழுவலும் தமையன் பாதங்களில்விழுந்து தம்பி வணங்கலும் மரபும் இயல்புமான செயல்கள். தன்பாலுள்ள அன்புமீக்கூர்தலால் தன்னைக் கும்பகருணன் தழுவினனென்பதை நினைந்து, தனக்கு அவன்பாலுள்ள அன்பு அதிகமாக, விபீடணன் கும்பகருணன்பாதங்களில்விழுந்து பணிந்தானென்று 'வெந்திறலினனும்', என்பதில் உள்ள 'உம்மை'யின்பொருளை விரித்துரைத்தல் பொருத்தமானது. இந்த உம்மையை இசைநிறைக்கும் அசையாகக்கொள்ளலுமாம்.

பாடபேதம்: [1] நீர்பொழி கண்ணின், நீர்கணுனெடிது. [2] என்பதென்றுன், என்பதென்ன.

[கும்பகருணன்காலில்விழுந்து கும்பிட்ட விபீடணன், வாய்புலர, முகம் வாட, உடலும் உள்ளமும் ஒடுங்கினவனுகி,'இன்னமும் இவனோடு பேசிப் பிணங்குதலாற் பிரயோசனமில்லை' யென்று கருதி, திரும்பிப்போவதே செய்யத்தக்கதென்றெண்ணி யெழுந்து, வழிவிட்டொதுங்கி இருபக்கமும் கும்பிட்டவண்ணமாய்நின்ற சேனையைக் கடந்து திரும்பிப்போய் இராமனை அடைந்தான்.]

88 எய்திய நிருதர் கோனு மிராமனை யிறைஞ்சி யெந்தாய்
உய்திற முடையார்க் கன்றே யறன்வழி யொழுகு முள்ளம்
பெய்திற னெல்லாம் பெய்து பேசினன் பெயருந் தன்மை
செய்திலன் குலத்து மானம் தீர்ந்திலன் சிறிது மென்றான்.

கொண்டுகூட்டு: எய்திய நிருதர்கோன், இராமனை இறைஞ்சி, 'எந்தாய், உய்திறமுடையார்க்கன்றே அறன்வழி உள்ளம் ஒழுகும்? பெய்திறனெல்லாம் பெய்து பேசினன். பெயருந்தன்மைசெய்திலன். குலத்துமானம் சிறிதும் தீர்ந்திலன்' என்றான்.

பொருள்: இராமனையடைந்த விபீடணன், 'நீங்கினின்று தப்பிப்பிழைக்குந் தன்மையுடையவர்க்கன்றே, தருமநெறியில் மனம் செல்லும்? (என் பேச்சுச்) சாமர்த்தியத்தையெல்லாம் பிரயோகித்துப் பேசினேன். (அவன்மனத்தை நமதுபக்கம்) திருப்பினனில்லை. (தன்குலத்தாரான இராக்கதரைவிட்டுப் பிரியக் கூடாதென்ற) குலாபிமானம் சிறிதும் நீங்கினனில்லை' என்று கூறினன்.

எய்திய - அடைந்த. நிருதர் - இராக்கதர். கோன் - தலைவன் (விபீடணன்). இறைஞ்சி - வணங்கி. எந்தாய் - என் தலைவனே. அறன் - அறம் - தருமம். பெய்தல் - பிரயோகித்தல், உபயோகித்தல். திறன் - திறம் - திறமை - சாமர்த்தியம். பெயர்தல் - திரும்புதல். தீர்தல் - நீங்குதல்.

89 கொய்திறச்[1] சடையின் கற்றைக் கொந்தளங்[2] கோலக்[3] கொண்டல்
நொய்தினிற்[4] றுளக்கி யைய நின்னெதிர் நுன்முன் னோனை[5]
எய்திறத்[6] துணித்து வீழ்த்த[7] லினிதன்றென் றினைய சொன்னேன்
செய்திற னினிவே றுண்டோ[8] விதியை யார் தீர்க்க கிற்பார்.[9]

கொண்டுகூட்டு: கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளம் கோலக் கொண்டல் நொய்தினில் துளக்கி, 'ஐய, நின் எதிர் நுன் மு(ன்)னோனை எய்து உறத்துணித்து வீழ்த்தல், இனிதன்று என்று இனைய சொன்னேன். செய்திறன் இனி வேறுண்டோ? விதியை யார் தீர்க்ககிற்பார்!

பொருள்: இராமன், (விபீடணன்சொன்ன தன்கருத்தை அறிந்துகொண்டதற்கு அடையாளமாகத்) தலையை அசைத்து, 'உன் எதிரே உன் தமையனை அம்பெய்து துண்டித்து வீழ்த்தல் துன்பமானதென்றெண்ணி இத்தன்மையான (அதாவது, அவனை நம்பக்கம் சேர்க்கக்கூடுமானால் சேர்ப்பாயாக என்ற) வார்த்தைகளைச் சொன்னேன். இனி நாம் செய்யும்வகை (போர்புரிதலன்றி) வேறில்லை. (அவன் விதி சாவதே. அந்த) விதியை விலக்கவல்லார் யார்!' (என்று கூறினான்).

கொய்திறச்சடை - கொய்துவிடுதற்குரிய தன்மையையுடைய சடை. கற்றை-திரள் - தொகுதி. கொந்தளம் - மயிர்க்கொத்து. கோலக்கொண்டல்- அழகானமேகம் (போன்ற இராமன்). நொய்தினில் - இலேசாக. துளக்கி - அசைத்து. நுன்முன்னோன் - உன் தமையன். எய்து இறத்துணித்து - (அம்பு) எய்து சாகும்படி துண்டித்து. இனைய - இத்தன்மையான (வார்த்தைகளை). தீர்க்க - நீக்க - விலக்க. கிற்பு - வலிமை. கிற்றல் - செய்திறங்கொள்ளுதல் (தமிழகராதி). தீர்க்ககிற்பார் - விலக்கவல்லார்.

யான் பார்த்த அச்சுப்பிரதிகளெல்லாவற்றிலும் 'கொந்தளங்கோலக் கொண்டல்' என்ற பாடமே உள்ளது. இந்தப் பாடங்கொண்டால், 'துளக்கி' என்ற வினைக்குச் செயப்படுபொருள் இல்லை. திருநெல்வேலிக்கவிராயரவர்கள்வீட்டு ஏட்டுப்பிரதியில் 'கொந்தளங்கோலக்கொண்டல்'என்ற பாடம் உள்ளது. இந்தப் பாடத்தைக்கொண்டு, உருபும் சாரியையும் உடன்தொக்க கொந்தளம் என்பதற்கு அத்துச்சாரியையும் ஐ யுருபும் கொடுத்து, 'கொந்தளத்தை'என ஆக்கியதை (மற்றைப் பாடங்களின்படி செயப்படுபொருளில்லாதிருந்த) 'துளக்கி' என்ற வினையின் செயப்படுபொருளாகக்கொண்டு பொருள் கூறப்பட்டிருப்பது காண்க.

பாடபேதம்: [1] கொய்திற்ற, கொய்தளிர்ச். [2] கொந்தளக். [3] காலக். [4]நொய்துறத். [5] நும்முனோனை. [6] எய்துற. [7] வீழ்க்கை. [8] வேறில்லை. [9] தீர்க்க வல்லார், தொத்தச் செய்வார்.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

இராமசெயம்.*

(இராமாயணத் திருப்புகழ்.)

[கஉ0-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

மருத்காம ரைத்திரும னைக்குள்
இருப்பீர்பு றப்படநி னைக்கின்
மகத்தான கற்கசம டைத்த திரு[1]வாசல்
வலிக்கேதி றக்கவகை கற்ற
துமக்கேயி னித்தகுந டக்கின்
மலர்த்தாள் பருக்கைக ளுறுத்தும் எனவேதான்

இரப்பான சொற்பலவு ரைத்தல்
[2]தினைக்கார்க ருப்பொரு[3]ள னைத்தும்
இழுக்காதி ருட்குறி[4]ந லத்தை புடையோர்மேல்
எடுத்தேபு லப்படமு டித்தென்
னிளைப்போடு நிற்பதுத விர்த்துன்
இணைப்பாத பற்பமிசை [5]செப்ப மதிதாராய்

நிரைத்தே[6]ப ரத்தமரர் நிற்க
வெளிக்கேகண் வைத்தநுமன் மற்று
நிலத்தூடு நிற்கவிண னைத்தும் உலகேழும்
நெடுக்கோடி முட்டியெதி ரிட்ட
குறுக்கோடி வட்டமிடு சுற்றி
[7]நெறிச்சூல நெக்கிட[8]வு ரைத்த நிரையார்தோள்

சிரத்தோட டிக்கடிய றுத்து
மயிர்க்கோரொ ரத்திர[9]மு கக்கை
சிவப்பேற வெற்றிவில்பி டித்து [10]மகவானோர்

* ஏட்டுப்பிரதிகளிலுள்ளபடி வெளியிடப்படுகிறது.

திருக்கேரி ளைக்கடவி யுக்ர
மிருக்தேத னித்தமர்வி ளைத்த
தெசக்ரீப னைப்பொருத ழித்த பெருமாளே. (73)

[பி-ம்.] [1] வாயில். அ. [2] திணைக்கால். அ. [3] ளகத்தும். அ. [4] நிலத்தை. அ. [5] செப்பு. அ. [6] புறத்தமரர். அ. [7] நிறைச்சூல. அ. [8] வுயிர்த்த. அ. [9] முகிர்க்கை. அ. [10] மகவானுர். அ.

[1]புகைபடைத் திருள்படைத்
தருளறத் தெருளறப்
புலையெடுத் தலைவுபட் டொருஞானப்
புகுதியற் றிடுமனக்
கபடனைத் திருடனைப்
பொறியனைச் சிலுகனைக் [2]கொடியோனைச்
சுகமுற ப்ரியமுறப்
பழியறப் பழுதறத்
துயரறத் துனியற க்ருபையாலே
தொழு[3]பிருத் தியனெனத்
தலைமிசைத் துளவுடைத்
துணையடிக் கமலம்வைத் [4]தருளாதோ
பகையெனக் கெவரெனக்
கள[5]மடுத் துயர்கவிப்
படைஞரைப் பொருதுதிக் கிருநாலும்
[6]பரிபடச் சுரரொளித்
தகலமைக் கடனடுப்
படுகனற் கடையுகத் தெழுமாபோற்
றகையறக் ககனமுற்
றிரதம்விட் டுலகினைத்
தழல்கொளுத் தியசரத் [7]தநுரேசன்

தனுவிழக் கரம்விழக்
கொடிவிழப் பலமுடிக்
தலைவிழப் பொருகணைப் பெருமாளே. (74)

[பி-ம்.] [1] புகையடைத். அ. [2] கொடியானைச். அ. [3] விருத்திய. அ. [4] தருள்வாயே. அ. [5] மருத். ச. [6] பறிபடச். ச. [7] தசுரேசன். அ.

நேயாத ரங்கொள் பெண்கள்
வாயூற லுண்ட தொண்டு
நீயாகு கின்ற தொண்டு நிகராகும்
நீநான றுஞ்சு கங்கொண்
மாமோனம் வந்து சிந்தை
நேரேயொ டுங்கு மன்றி யயல்வேறொன்
றுயாது பஞ்ச விந்த்ரிய
வாதீன மங்க டங்கு
மாறாது விஞ்சு கின்ற பகைதானு
மாதாளி குன்று நின்று
நாணாது விஞ்சு கின்ற
[1]வாலோப மங்கு மின்பம் ஒழியாதே
[2]தீயாதி ரும்பு விஞ்சி
யேகாகொ ளென்று சென்று
தேரோடு விண்ப டர்ந்து வடமேருத்
[3]தீவேழொ ரண்ட ரண்ட
மூடேகி வெஞ்சி னங்கள்
தீராது பின்று டர்ந்து முதலேவு
மாயாச ரங்க லங்க
ஞானேத யந்து ரந்து
மார்பூறு கண்டு மண்டு கணையேவி

மாராவ ணன்சி ரங்க
ணேரேய ரிந்த ரிந்து
வானோரை யஞ்ச லென்ற பெருமாளே. (75)

[பி-ம்.] [1] மாலோக. அ. [2] தீயாய். அ. [3] தீயேழொ. சு.

தேரிய வாரா யினிது பாராய்
தெளிவு தாராய் [1]வினையாருஞ்
சிலுகு தீராய் புகழை யோராய்
சிறிது சோரா யடியேனுக்
கொருசொல் கூறாய் நரகை மாறா
[2]யுரியர் வேறா றறிவேனு
னுபய தாளே [3]யினிய நாளோ
யுதவு நாளே [4]தருள்வாயே
கர[5]வு றாதே மிகை[6]சொ லாதே
[7]கதைவி டாதே நிருதேசன்
கணைதொ டாதே [8]சிலையெ டாதே
கதுமெ னாதே யினிமேலும்
பொரவொ ணாதே வலவன் மேலே
பொறிகள் போயே தலைசாயப்
புதுமை யாயே ககன மீதே
பொருத வானோர் பெருமாளே. (76)

[பி-ம்] [1] வினையாறுஞ். அ. [2] யுரிய ராவா றறிவெயெ. சு. [3] யினியு நாயே னுடைமை. சு. [4] தருளாயே சு. [5] வறாதே. சு. [6] கொலாதே. சு. [7] கனை. சு. [8] நிலை. சு.

பணியேனினைத் தருகேனுனைப்
பரவேனெழுத் திருநாலும்
பகரேனெடுத் தழையேன்முதற்
[1]பயிலேனடிப் பொடியாகத்

துணியேனகத் தடியார்தமைத்
துணையாமெனக் கருதே[2]னென்
துயர்தீருமெப் படியோவினிச்
சொலவேணும்விட் [3]டொழியாதே
யணியே[4]கெடுத் தடனேவிடுத்
தனுகாவரக் [5]கணைமீளென்
றழகானபத் திருதோளறுக்
கடராமறித் தவன்மீளக்
கணைமாரிமட் டுயிரேதவிக்
கையினுலிளைத் தயலேகிக்
களை[6]மாறவிட் டமராடுநற்
கருணாகரப் பெருமாளே. (77)

[பி-ம்] [1] பரவேனடிப். அ. [2] னத். அ. [3] டொளியாதே. அ. [4] கொடுத். ச. [5] கனை. அ. [6] யாற. அ.

இங்கோ வஞ்சக வெங்கா லன்படை
யெங்கே வந்திவன் விழுவானென்
றென்கூ றென்பவ ருன்கூ றென்பவ
ரென்றே னுந்தனி கொடுபோவார்
அங்கோ பங்கயர் கண்கா ணும்பொழு
தந்தா வந்தனன் மறியானென்
றன்றே வண்புவி யின்பா லுந்துவ
ரந்தோ வெங்கினி நிலையாவேன்
வெங்கோ பங்கொடு லெங்கே சன்படை
வென்றே [1]னென்றெதிர் விடலோடும்
விண்போய் வெங்கடல் மண்போ யங்கையின்
பின்பா ணங்களு மயனார்தஞ்

செங்கோ லுஞ்சிவன் வெங்கோ லுந்தனி
	தின்றே வந்துடல் புகநாடுந்
திண்சூ லந்தனை யுங்கா ரங்கொடு
	செந்தூள் கண்டருள் பெருமாளே. (78)

[பி-ம்] [1] சென்றெதிர். ச.

கோதைய ரளவில் வைத்த
	காதலை யயுத [1]லெட்ச
	கோடிய [2]தெனை நறுக்கி யதிலேயோர்
கூறது நினது பத்ம
	வீரடி மருவு பத்தி
	கூரினு மெழுபி றப்பில் விழுவேனோ

ஆதவ னுலகை விட்டு
	வாசவ னரசு தெட்டி
	யாதியி லயனி ருக்கை கழியாநீ
ரூடித னிலைவெ றுத்து
	மேலுயர் பதவி பற்றி
	யாசறு பரம [3]பத்தி [4]பெறுவேனோ

சீதையை முதலெ டுத்த
	சோரனை வெளியில் விட்ட
	தேரொடு திரிய விட்டு விளையாடிச்
சீரிய கொடிய றுத்து
	வீசிய கதையை மிக்க
	தீயெழு துகள்ப டுத்தி யலையாத

மாதிர [5]மதிர வெட்டு
	வாரண மிரிய விட்ட
	வார்கணை பலவி லக்கி யனல்போலே

வாளியை [6]முடுகு மெத்து
தோளிரு பதும றுத்து
வானவ ரிடர்கெ டுத்த பெருமாளே. (79)

[பி-ம்] [1] லெக்க. அ. [2] தது. ச. [3] முத்தி. அ. [4] அடைவேனே. அ. [5] மலைய. அ. [6] முடுகி. அ.

தொங்கல்சுற் றிக்கருங்
கொண்டைபற் றிச்செழுந்
தொண்டைதுய்த் துக்கொழுஞ் சுழியூடே
தொந்தமிட் டுத்துளைத்
தங்கமொத் துப்பழுந்
தொண்டுபட் டுத்தழும் புறமார்பிற்
கொங்கைதைக் கக்கலந்
திங்கிதத் திட்டசெங்
குங்குமப் பொட்டழிந் திடமேளங்
கொண்டகெர்ச் சிப்புடன்
பெண்களிற் [1]பட்டிடுங்
கொந்தளிப் பற்றுவந் தடைவேனோ
சங்கெடுத் துக்கொடண்
டம்பிளக் கப்பணுஞ்
சம்ப்ரமப் பத்திரண் டியர்தோளான்
றண்டறுத் துக்கையம்
புந்துணித் [2]தெங்கையுஞ்
[3]சங்கரிக் கக்கொடுந் தொழிலாளன்
பைங்கழுத் தற்றிடுஞ்
செஞ்சிரத் துக்[4]கதம்
பங்களைக் கைத்தலங் கொடுபேய்கள்

பங்கமிட் டுப்பெரும்
பந்திகட் டிக்கடும்
பந்தடிக் கப்பொரும் பெருமாளே. (80)

[ரு-ம்] [1] பட்டடும். ச. [2] தெத்தையுஞ். ஆ. [3] சங்கரித்துக். அ. [4] கவந்தங்களைக். அ.

கலையதுநெ கிழ்த்துக்
குழலிணைய விழ்த்துக்
கவிரிதழ்பி டித்துச் சுகமோகக்

களையைவரு வித்துச்
சிறுகுரலெ ழுப்பிக்
கரமிறுக விட்டுத் தனமாகுங்

கொலைமதக ளிற்றைக்
கணகமரு மத்துக்
குழிபடநி றுத்திக் கொடுவாழும்

கொடியகல விக்குத்
தெரிவையரை நத்திக்
குழைவுறுக ருத்துத் தணியாதோ

பலதலைய ரக்கப்
பயலையெதி ரிட்டுப்
படைபொரு[1]த வத்துத் தலைசேரப்

பவுரிகொள விட்டுத்
திடுபொடென நட்டுப்
படுகளநி ரைத்துத் தெளிவோடே

சிலதலைது டிக்கச்
சிலதலைப தைக்கச்
சிலதலைசி ரிக்கச் சிலபேயின்

றிளதுகு விக்கக்
கணைமுடுகு சித்ரச்
சிலையுடைய சொக்கப் பெருமாளே. (81)

[பி-ம்] [1] தறுத்துத். அ.

உளத்திற் கறுப்பிற்
[1]பதைப்பைத் தவிர்ப்பித்
துருக்கித் திருத்தித் தனியேநீ
[2]யுதித்துக் கதித்துச்
செழித்துத் தொழிற்பட்
டுறைத்து [3]ப்ரபைக்குட் சுடராகிற்

துளக்கற் றிருக்கப்
படைத்துக் கண்வைத்துச்
சுகித்துக் களித்திட் டமுதாறித்
துளிக்கப் பொசித்துப்
பிறப்பற் றிறப்பைத்
தொலைத்துத் தலைப்பெற் றிடுவேனோ

களத்தைக் கடக்கப்
புறப்பட் டெதிர்த்துக்
கதித்திட் டரக்கர்க் கிறையோனைக்
கரத்தைச் சிரத்தைப்
பறித்துக் குவித்துக்
[4]கணத்திற் பிணத்திற் றலைசோத்

துளைத்துச் சிவிட்கிற்
[5]களைக்கத் திளைக்கச்
சுழித்துச் [6]சலித்துக் கணைமீளத்

[7]தொடுத்துத் தொடுத்துக்
கழித்துக் கழித்துத்
துணித்திட்ட வெற்றிப் பெருமாளே. (82)

[பி-ம்] [1] பரப்பைத். அ. [2] யுதித்துத் துதித்துச். அ. [3] ப் பிறப்பைச். அ. [4] களத்திற். அ. [5] கிளைக்கக் கிளைக்கச். அ. [6] சிலிர்த்துக். ச. [7] தொடுத்துத் தொடுத்துத் தொடுத்துக் கழித்துத் தவிர்த்திட்ட? பெருமாளே. ச.

நாடுகள் காட்டை நேர்தரும்
வாழ்வுகள் கேட்டை யேசரி
நாரியர் சேட்டை போலுவர் கலியாண

நாளிழ வேற்ற நாணிகர்
பேரொழின் [1]மூச்சி லாவுட
னுவினில் வாழ்த்து நூடண மவராடு

மோடைகண் மூத்ர மேபுனை
யாடைகள் போட்ட தோல்சுவை
யூன்விட மேற்ற நீர்சுரை யுனைநாளு

மோதியு லாத்தி யேபணி
யாதவர் மாட்டின் மேவிய
வோசைகள் கீர்த்தி யானதும் [2]வசையாமே

கூடியொ ரோட்ட மாயொரு
தேரினை யோட்டி வானிடை
கோல்பல [3]பூட்டி நீள்குரு திகள்சோரக்

கூர்வடு நாட்டி யேநிரை
தோள்களை வாட்டி வார்கணை
கோலமெ லாத்து மூழ்கிட வெதிர்தூவி

யீடழி வாக்கி யேதுமெ
டாவகை நீக்கி மார்பினை
யேதுளை [4]யாக்கி நீடிய வரமாக
வீசுரர் பாட்டி லேபெறு
நாள்களை வீட்டி [5]மோகன
ராவண வேட்டை யாடிய பெருமாளே. (83)

[பி-ம்] [1] மூக்கிலா. அ. [2] மிகையாமே. அ. [3] நீட்டி. அ. [4] போக்கி. அ. [5] மோகர. அ.

பட்டுமணிக் கச்சிறுகக்
கட்டியவிழ்த் துத்தரிகப்
பத்தியின்முத் துத்தெரியக் கொடுபோதும்
பற்பமுகைக் கொத்தமுலைத்
தத்தையர்கைப் புக்கவசப்
பட்டுருகிக் கெட்டவினைத் தொழிலாலே
[1]துட்டனெனப் பித்தனெனக்
[2]கட்டனென ப்ரட்டனெனத்
துப்பறுசித் தத்தனெனத் திரிவேனைத்
தூக்கமறுத் துக்கமலப்
பொற்பதம்வைத் துட்பொறியைச்
சுத்திபணிப் பத்தருள்வைத் தருள்வாயே
சிட்டவுருக் கட்டிவனத்
துற்றுமலர்ப் பொற்[3]கொடியைச்
சித்ரரதத் திற்கொடுபுட் படநூறித்
தெற்குநடத் திப்பதியுட்
புக்குநறைப் புட்பவனத்
திற்சிறைவைத் திட்டமுழுப் பகையாளன்

கொட்டமறப் பட்டமறச்
செற்றமறத் தற்கமறக்
கொச்சைமனத் திச்சையறப் பலதோளின்
கொற்றமறச் சுற்றமறப்
பற்றுமறப் பத்துமுடிக்
கொத்துமறத் தொட்டகணைப் பெருமாளே. (84)

[பி-ம்] [1] துட்டனெனக் கட்டனெனப். அ. [2] பித்தனென. அ. [3] றுடியைச். அ.

நூறுபி ராயமி ருந்தும்
வாழ்வுகள் சேரவ டைந்து
நூறுவ தேதிட மென்பு துணராதே
நூல்வழி சேரமு னிந்து
நீள்பெரி யோரையி கழ்ந்து
நூபுர மேவிய செம்பொ னடிமாதர்
கூறையி லேமன மண்டி
யாரொடு மேபகை கொண்டு
கூறுக ளேபடு கின்ற தமியேனுங்
கூழுல கேழும ளந்த
பாதச ரோருகம் வந்து
கூடிநி ராசைபி றந்து விடுவேனோ
மாறுகொள் போரிலி றந்து
கீழ்முக மாகவி ழுந்த
மாயவி ராவண னுங்கன் முதுகூடே
வாளம தானத ழும்பு
காணனு நாணி[1]மெய் வென்றி
மாசுறு மேயென கொந்து தளர்போதில்

வீறிய வாரண தந்த
மார்புரு வாமுது கின்கண்
மேவிய தோர்வடு வின்றி வடுவாக
வேறிலை காணென வந்து
நீசலி யாதுகொ ளென்று
வீடணர் கூறமகிழ்ந்த ·பெருமாளே. (85)

[பி-ம்] [1] யென், அ,

நேமியுங் குளிர்சங்கு
மானதண் டமுமங்க
நீலமஞ் சிலைவென்ற வெழிருனு
நீயுமம் புயமங்கை
பேர்பெறுஞ் செகமங்கை
நேரிலிங் கிருபெண்கள் புடைசூழச்
சாமரங் களுநின்று
வீசாம் பையரண்டர்
தாமிறைஞ் சிடவந்து தமியேனைச்
சாதனம் பெறுகொண்ட
னுமெனும் படிகண்டு
தாளிரண் டையுமென்று தருவாயோ
மாமயன் குலமங்கை
ராவணன் கிடைகண்டு
வானகம் புகமுந்தி யவன்மேலே
வாய்திறந் தழுதங்கி
மீதணிந் தொருதம்பி
வாழிலங் கையுள்வந்து [1]முடிசூடித்

[2]தூமமங் கல[3]துங்க
வீடணன் கவிநண்பர்
சூழவந் திருசெம்பொ னடி[4]சூடத்
தூதனன் பொடுசென்று
சீதைதன் றிருமுன்பு
சோபனஞ் சொலநின்ற பெருமாளே. (86)

[பி-ம்] [1] புனேமோலி. ச. [2] சூடி. ச. [3] துங்கன். ச. [4] சூடித். ச.

மதியொடுது திக்கினுமி ருந்துன்
அழகியச ரித்திரம டங்க
வளமுற[1]வு ரைக்கிலும்வி ளம்பு மதுகேளா
மனமுருகி [2]நிற்கிலுமு னன்பர்
உறவது[3]ப டைக்கிலுமி குந்த
வரிசையு[4]ம ளைத்தழகு நின்ற பெருவாழ்வும்
நிதியுமுயர் சத்தியுநி றைந்த
பலகலையு நட்புடைய மங்கை
நிலைபெறும கிழ்ச்சியும்வி ளங்கு சிறுவோரு
நிறைபொறையு முத்தமகு ணங்கண்
முழுதும்வழு வற்றதொரு டம்பு
நிலமிசைய ளித்துயர்வை குந்தம் அருள்வாயே
முதிர்சினநெ ருப்பெழவ ழன்று
கொடியதொரு சுக்கிரிப னன்று
முதல்வனைமு டித்திட[5]வு வந்து பொருபோது
முழுதுணர ரக்கர்பதி வந்து
தமயனைவெ றுத்தமர்க டந்து
முடியரசு பெற்றடி[6]ப ணிக்க [7]னொருபோதும்

பதியாசி ருப்பதுது றந்து
கொடியதொரு வற்கலைபு னைந்து
பரிவொடுநி னைத்தழுத டங்கு றவோடே

பழுதறு[8]க னற்குமுன்னி ளங்கி
யொருதனியி ருப்பினிலி ருந்த
பாதனைநி னைத்துருகு மெங்கள் பெருமாளே. (87)

[பி-ம்] [1] வுரைக்கினும். அ [2] நிற்கினு. அ. [3] படைக்கினு. அ. [4] முனைத் தழகு. ச. [5] வுகந்து. ச. [6] பணிந்து. அ. [7] வருபோதும். அ. [8] கணிற்கு. ச.

வீசுமிரு கண்களே வேல்களென் றுங்களப
வாசமுறு கொங்கையே மேருவென் றுந்தொடையல்
வேரியள கங்களே மேகமென் றுங்கரிய கொடிபோலே

மேவுபுரு வங்களே சாபமென் றுங்குருகி
ஞைசைதரு கண்டமே கோடதென் றும்புளகம்
வீறுகழை யங்கமே தோள்களென் றும்பரவி மடவார்பா

னேசமுறு தொண்டனு பாதன்வஞ் சன்கபடன்
மானமிலி பண்பிலா மோகிவம் பன்கயவன்
நீசனச டன்பாரா தீனனெஞ் சங்கொடிய வினையேன்[1]யான்

நீதிநிலை நின்றுஞா ஞைதயங் [2]கண்டுனது
காவிரிய ரங்கமா கோயிலுஞ் சந்ததமு
நீதிருவ நந்தன்மே லேவிளங் கும்புதுமை நினைவேனோ

தேசுடனி லங்கையூர் வீடணன் [3]கொண்டுமுடி
சூடியுடன் வந்துதாண் மீதிறைஞ் சும்பொழுது
சீர்பெறந டந்துநீ ராவணன் பண்டுசிறை யிடவாடுஞ்

சீதையையென் முன்கொடே போதியென் றங்கருள
வீறொடுகொ ணர்ந்ததோர் காலையின் பொங்கியெழு
தீமுழுகி வந்துபா தாரவிந் தங்கள்பெறு திருநாளின்

கேசவமு குந்தசீ ராமவுன் சிந்தைமகிழ்
சானகியை யெங்கண்மா தாவையின் றன்பினொடு
[4]கேண்மையுறமுன்புபோன்மேவுகென்றண்டர்[5]தொழுசபையூடே
கேகயன்ம டந்தையே தேவியென் றும்பரதன்
நீடுகுல மைந்தனே யாகுமென் றும்பழைய
கேள்வியுறு தந்தைபால் நீள்வரங் கொண்டுவரு பெருமாளே. ()

[பி-ம்] [1] பால். அ. [2] கொண்டுனது. ச. [3] சென்றுமுடி. அ. [4] கீழ்மையற. ச. [5] புகல். அ.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

படியாதவர் படும்பாடு:—இது, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப்பட்டதொரு புத்தகம்; கல்வியின் இன்றியமையாமையும் கற்றோரது உயர்வும் கல்லாதாரது தாழ்வும் தோன்றப் பல புனைகதைகளாலும் சித்திரங்களாலும் நீதிவாக்கியங்களாலும் பழையவும் புதியவுமான செய்யுள்களாலும் விளக்குவது; கல்வியின்சிறப்பினை விளக்குதல்மட்டுமன்றி உலகியலறிவினையூட்டுவதாயும் நூல்பொருளைப் படிப்போர்கருத்துள் நன்கு பதிய வைப்பதாயும் மேலும்மேலும் படிக்க விழைவூட்டுவதாயும், செவ்வியசொற்களால் திருந்திய இனிய நடையுடையதாயும் விளங்குவது. இதன்விலை அணா ஆறு. வேண்டுவோர், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், கீழரதவீதி, திருநெல்வேலி: என்ற விலாசத்திற் பெறலாம்.

விக்கிரமவருஷ (ஆநந்தபோதினி) சுத்ததிருக்கணித பஞ்சாங்கம்:- இது, கணிதசாஸ்திரத்தில் பி. ஏ. பட்டம்பெற்றவரும், பலவகைக் கணிதப்பயிற்சியுள்ளவருமான ஸ்ரீ C. G. ராஜன் B.A., அவர்களால் கணிக்கப்பட்டது; சோதிடவிஷயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய பலவகை விவரக்குறிப்புக்களையுடையது; ஜாதகம் கணிக்க விரும்புவோர்க்கும் புரோகிதர் முதலியோர்க்கும் உபயோகமானது; திருவிழாக்கள் முகூர்த்தங்கள் விரதங்கள் திதிகள் முதலியவற்றை நன்குவிளக்குவது; சிறந்த பஞ்சாங்கங்களுள் ஒன்றாய் மதிக்கத் தக்கது; புத்தகங்கள் மருந்துகள் விஷயமான பல விளம்பரங்களையும் கொண்டது. இதன்விலை அணா 3. வேண்டுவோர் சென்னை கிருஷ்ணப்பநாய்க்கன்குளத்திற்கு மேல்புறம் நிர். 6, லாயர் சின்னத்தம்பிமுதலி தெருவிலுள்ள ஆநந்தபோதினி ஆபீஸில் பெறலாம்.

சுவர்க்கமும் அதன் அதிசயங்களும் நரகமும்:— இது, சற்றேறத்தாழ நூற்றெழுபதுவருடத்துக்குமுன் ஸ்வீடன்தேசத்தில் வாழ்ந்தவரும் அரியநூல் பலவற்றை யியற்றியவருமான ஸ்வீடன்பர்க் என்பவரால் லத்தீன்பாஷையில் இயற்றப்பட்டநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு; சுவர்க்கத்திலுள்ள பலவேறு காட்சிகளையும் சுவர்க்கவாசிகளின் தூய்மையும் அறிவாற்றல்களும் இன்பமும் ஆகியவற்றையும், நரகத்தோற்றமும் நரகர்களின் இயல்பும் அனுபவமும் ஆதியவற்றையும் விரித்து விளக்குவது. இதனைத் தமிழுரைநடையாக மொழிபெயர்த்து அச்சிட்டுதவியர், சென்ற நியூரிபார்மர் பத்திராதிபர் ஸ்ரீ. D. கோபாலசெட்டியாரவர்களாவர். இதில் வைதிக ஹிந்துசமயத்தவர்களுடைய உயர்ந்தகொள்கைகளின் சாயையும், பல சிறந்த தமிழ்ப்பனுவல்களின் கருத்துக்களும் ஆங்காங்குக் காணப்படுதல் இதனைப் படிப்போர்க்கு நன்கு புலனாகும். இது மேலும் திருத்தமும் விளக்கமும்பெற்று உலகிற்குப் பயன்படத்தக்கதாகுக. 550 பக்கங்களில் அழகாக அச்சிடப்பட்ட இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் (சென்ற நியூரிபார்மர் பத்திராதிபர்) ஸ்ரீ. D. கோபாலசெட்டியாரவர்கள், ராயப்பேட்டை, சென்னை: என்ற விலாசத்திற் பெறலாம்.

உ

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[௧௦௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

12. பிரேயான்.

𑌪𑍍𑌰𑍇𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌚𑌾𑌟𑍂𑌕𑍍𑌤𑍌 𑌯𑌦𑍍𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௭௧ ॥

நயம்பட உரைக்குங்கால் அன்புமிக்குத்தோன்றுமாறு கூறலால் பிரேயான் (-பிரேயஸ்) என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

𑌸𑍌𑌜𑌨𑍍𑌯𑌾𑌮𑍍𑌬𑍁𑌨𑌿𑌧𑍇 ! 𑌬𑍁𑌧𑌪𑍍𑌰𑌿𑌯 ! 𑌗𑍁𑌣
𑌗𑍍𑌰𑌾𑌮𑌾𑌕𑌰 ! 𑌧𑌰𑍍𑌮𑌦𑍍𑌰𑍁𑌮 !
𑌪𑍍𑌰𑌾𑌰𑍋𑌹 ! 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌵𑌤𑍍𑌸𑌲 ! 𑌤𑍍𑌯𑌾
𑌗𑌨𑌿𑌧𑍇 ! 𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌶𑍍𑌰𑌯 ! ।

𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌵𑌾𑌸 ! 𑌮𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑍀𑌮𑌨𑌸𑌿𑌜
𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌗𑍁𑌰𑍋 !
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍 ! 𑌮𑍁𑌞𑍍𑌜 ! 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌂 𑌜𑌨𑌮𑍇𑌵
𑌸𑍍𑌪𑌷𑍍𑌟𑌂 𑌦𑍃𑌶𑌾 𑌨𑌾𑌹𑌸𑌿 ॥

நல்லொழுக்கமென்னும் நீர்நிறைந்த கடல்போன்றவனே! கற்றோரிடத்தன்புடையோனே! நற்குணங்களுக் கிருப்பிடமே! அறமென்னும் கற்பகத்தருவே! அடைந்தாரைக் காப்போனே! பெருங்கொடையாளியே! அறிவுக்கு இல்லமே! இலக்குமிதேவிக்கு வசிக்கும் இடமே! ஊடல்கொண்டபெண்டிர்க்கு அநுராகத்தை உண்டாக்குபவனே! செல்வனே! முஞ்ஜவரசனே! அடியேனைக் கண்ணெடுத்துக் காணுகலென்னோ?

இங்கே அன்பு மிகுந்துதோன்றுமாற்றால் இது "ப்ரேயான்" என்னும் குணமுடையதாம்.

13. ஸௌசப்தை

வ்யுத்பத்தி: ஸுப்திஙாம் யா து ப்ரோச்யதே ஸா ஸுசப்ததா।

பெயர்ச்சொல் முதலிய நால்வகைச்சொற்களையும் வழுவாது கூறின் "ஸௌசப்தை" (-வழுவற்றசொல்லுடைமை) என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

தஸ்யாஜீவநிரஸ்தஸ்ய மாதர ஜீவஸ்ய மாஜீவதோ
ஹ்ருத்யா ஆஜநநி: கிம்ப! ஜநுஷா ஜநோஸ்வ-ப்ரயாஜ்ஞநந:।
யஸ்த்வாமேவ ந வந்ததே ந யஜதே நாவைதி நாவைக்ஷதே
நாவஷ்டௌதி நமந்த்யதே நமந்தே நாவைத்யதி நத்யாயதி॥

(இது தேவியின்துதி.) தாயே! எவன், உன்னை வணங்காமலும், உன்னைக் குறித்து வேள்விகள்செய்யாமலும், உன்னை அணுகாமலும், உன்னைக் கருதாமலும், உன்னை மனதில் வைத்துக் கொண்டாடாமலும், உன்மந்திரத்தைச் செபிக்காமலும், உன்னையே தியானம் செய்யாமலும் இருப்பானோ அவன்பிறவி வீணேயாகும். அவன் மிருகம்போன்றவன். அவன் இறந்தாலும் நலம்.

இங்கே "ஆஜீவநி:" "ஆஜநநி:" "வந்ததே" "யஜதே" முதலிய சொற்கள் அரிய இலக்கண மமைந்தவையாய் இலக்கணவழுவின்றி யிருத்தலால், இது "ஸௌசத்தை" என்னும் குணமுடையதாம்.

14. ஸமாதி.

ஸமாதி: ஸோऽந்யதர்மாணாம் யதந்யத்ராதிரோபணம்॥ எஉ॥

ஒன்றன் கருமத்தைப் பிறிதொன்றன்மே லேற்றிக்கூறுதல் "ஸமாதி" எனப்படும்,

உதாரணம்:—

ப்ரதீச்சத்யாஶோகீம் கிஸலயபராவ்ருத்திமதர:
கபோல: பாண்டுத்வாதவதரதி தாலீபரிணதிம் ।
பரிம்லாநப்ராயாமநுவததி த்ருஷ்டி: கமலிநீ
மிதீயம் மாதுர்யம் ஸ்ப்ருஶதி ச தநுத்வம் ச பஜதே ॥

(இம்மடந்தையின்) கீழுதடு அசோகந்தளிர்களுடன் ஒப்புமையை விரும்புகின்றது; கன்னங்கள் வெளுத்திருப்பதால் பனங்குருத்தோலையின் செவ்வியில் இறங்குகின்றன; கண்கள் வாடிய தாமரைமலரை அநுவாதம் செய்கின்றன (—ஒத்திருக்கின்றன); இவ்வாருக இவள் அழகையும் தொடுகிருள் (—அடைகிருள்) மெலிவையும் அடைகிருள்.

இது,—விரும்புதல், இறங்குதல், அநுவதித்தல், தொடுதல்—என்னும் உயிர்ப்பொருட்டொழில்களை, வேருப அங்கங்களுக்குத் தந்து கூறினமையால் "ஒன்றற்குரிய கருமத்தைப் பிறிதின்மீதேற்றிக்கூறுதல்" ஆகிய "ஸமாதி" என்னும் குணமுள்ளதாயிற்று.

15. ஸௌக்ஷ்மியம்.

ஊஹ்ய: ஸஞ்ஜ்ஞாப்ரவேஶ்யம் ஶப்தாநாம் ஸௌக்ஷ்ம்யமுச்யதே ।

ஆலின் விதைகள் பெரியமரத்தைச் சூக்குமமாக உள்ளே அடக்கிக்கொண்டிருப்பதுபோல் சொற்கள் பலவேறு சொற்களைச் சூக்குமமாக உள்ளடக்கிக்கொண்டிருக்குமாறு கூறின் ஆங்கு, "ஸௌக்ஷ்மியம்" என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

கேவலம் தயதி கர்த்ருவாஹிந: ப்ரத்யயாநிஹ ந ஜாது கர்மணி ।
யாதவஃஸ்ருஜதிஸம்ஹ்ருஶாஸ்தய: ஶௌரிரார்த்தவிபரீதகாரக: ॥

(இது கடவுளைப்பற்றிக் கூறுகிறது). இவன்விஷயத்தில் "ஸ்ருஜ்" (-படை) "ஸம்ஹ்ரு" (-கொல்) "ஶாஸ்" (-சிக்ஷி) என்னும் வினைமுதனிலைகள் வினைமுதல்விகுதியைமட்டும்பெற்று

வழங்கப்படும்; (செயப்படுபொருள்விகுதியைத் தந்து வழங்கப் படா.) "ஸ்து" (-துதி) என்னும் வினையடி முன்சொன்னதற்கு விபரீதமாக வழங்கப்பெறும். (அது செயப்பாட்டுவிகுதியை மட்டும் பெற்றுவழங்கும்; வினைமுதல்விகுதிபெற்று வழங்கப்பெரு தென்றவாறு).

இங்ஙனம் கூறியதினின்றும், கடவுள் (உலகங்களைப்)படைப் பவனாகவும் காப்பவனாகவும் அழிப்பவனாகவும் இருப்பதன்றி, அவன் பிறரால் படைக்கப்படுபவனும் காக்கப்படுபவனும் அழிக் கப்படுபவனும் ஆகான் எனவும், அவன் பிறரால் துதிக்கப்படுவ தன்றிப் பிறரைத்துதிக்கும் வினைமுதலாக ஆகான் எனவும் பலசொற்கள் தோன்றுதலால், இச்சுலோகம் "ஸௌக்ஷ்மியம்" என்னும் குணமுள்ளதாகும்.

16. காம்பீரியம்.

ध्वनिमत्ता तु गाम्भीर्यम्……………

தொனி (குறிப்பு)ப்பொருள் தோன்றுமாறு கூறுதலினுல் "காம்பீரியம்" என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

शौरे धारय पुण्डरीकममितं [illegible] विक्रमं
चक्राङ्कं वह पादयुग्ममवनीं दोष्णा समुद्धारय ।
लक्ष्मीं भ्रूतटिके निवेशय भव ज्यायान् दिवौकस्पतेः
विश्वान्तःकरणैकचौर तदपि ज्ञातं हरिः खल्वसि ॥

பெரிதான வெண்டாமரையைத் தலையில் அணிந்துகொள்; உன்வலிமையை வெளியிடு; சக்கரமுதலிய நல்ல ரேகைகளமைந்த திருவடிகளையுடையவனுயிரு; பூமியைக் கைகளால் தாங்கு; இலக்குமியை (-செல்வத்தை)ப் புருவங்களினருகே இருக்கச்செய்; இந்திரனுக்கு மூத்தோனுக இரு; மூவுலகின்மனத்தையும்கொள்ளை கொண்டவனே! அங்ஙனம் கொள்ளைகொள்வதும் தெரிந்தது; நீ ஹரியாயுள்ளாயல்லவா? (ஹரி=கவர்வோன்).

இங்கே கூறிய தொடர்களால், உந்தியில் தாமரையையுடைய னுதல், மூவுலகளத்தல், சக்கராயுதத்தைக் கையில் தாங்குதல், கடைப்பல்லால் பூமியை எடுத்தல், திருமார்பில் இலக்குமிதேவியை வைத்துக்கொண்டிருத்தல், இந்திரனுக்கு இளையோனுதல் என்னும் பொருள்கள் தொனிப்பதால் இது "காம்பீரியம்" என்னும் குண முடையதாகும்.

17. விஸ்தரம்.

....................व्यासेनोक्तस्य विस्तरः ॥ ௭௩ ॥

கூறும்பொருளை விரித்துரைப்பின் அங்கு "விஸ்தரம்" என் னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

जनः पुण्यैर्यायाज्जलधिजलभावं जलमुच-
स्तथावस्थं चैनं निदधतु शुभैः शुक्तिवदने ।
ततस्तां श्रेयोभिः परिणतिमसौ विन्दतु यया
रुचिं तन्वन् पीनस्तनि हृदि तवायं विलसति ॥

பெருத்த கொங்கைகளுடையவளே! நான் என் புண்ணியங்க ளால் சமுத்திரத்தில் தண்ணீராயிருக்கப்பெறுவேனாக; அங்ஙன மிருக்கும் என்னை மேகம் நல்ல முத்துச்சிப்பிகளில் சேர்ப்பதாக; பின்பு நான் பருத்த முத்தாகப்பெறுவேனாக; இதெல்லாம் எதற் காகவெனில், உனக்குப் பிரியத்தை விளைத்துக்கொண்டு உனது மார்பில் (முத்தாகிய) நான் புரண்டுதிளைத்து வாழலாமல்லவா?

இங்கே, ஒருபெண்ணைநோக்கி ஆண்மகனொருவன் "உன் மார் பில் யான் என்று துயிலப்பெறுவேன்" என்னும் தன்கருத்தை விரித்துக்கூறினமையால் இது "விஸ்தரம்" என்னும் குணமுள்ள தாகும்.

18. ஸம்க்ஷேபம்.

समासेनाभिधानं यत्स संक्षेप उदाहृतः ।

பொருள் சுருக்கியுரைக்கப்படுமாயின், அங்கே "ஸம்க்ஷேபம்" என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

𑌮𑌾𑌰𑍁𑌤𑌿 𑌸𑌮𑌾𑌨𑍀𑌤 𑌮𑌹𑍌𑌷𑌧𑌿𑌹𑍃𑌤𑌵𑍍𑌯𑌥𑌃 ।
𑌲𑌙𑍍𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑍁𑌨𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑍇 𑌵𑌿𑌲𑌾𑌪𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌕𑌂 𑌶𑌰𑍈𑌃 ॥

மாருதியால் கொணரப்பெற்ற அரியதொருமருந்தினால் துன்பமெல்லாம் நீங்கப்பெற்ற அவன் (—இலக்குமணன்) தன் அம்புகளால் இலங்கையிலுள்ள மடந்தையர்க்கு அழுகையைக் கற்பிப்பதற்கு மறுமுறையும் ஆசானானான். (அரக்கர் பலரையும் மடித்தானென்றவாறு.)

கேட்போர்க்குத்தோன்றும் வீரச்சுவையை, நீட்டித்துக்கூறுதலால் தடைப்படுத்தலாகாதெனக்கருதி, போர்நடந்தமுறையை விரித்துக்கூறுது சுலோகத்தின் இரண்டடிகளாலே சுருக்கிக் கூறியிருத்தலால், இது "ஸம்க்ஷேபம்" என்னும் குணமுடையதாம்.

19. ஸம்மிதத்துவம்.

𑌯𑌾𑌵𑌦𑌰𑍍𑌥𑌪𑌦𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌮𑌿𑌤𑌤𑍍𑌵𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௭௬ ॥

கூறவேண்டியபொருளை உணர்த்தற்குவேண்டிய சொற்களை மட்டும்வைத்துச் சொல்லின், அங்கு "ஸம்மிதத்துவம்" என்னும் குணம் தோன்றும்.

[முற்கூறிய "ஸம்க்ஷேபம்" என்னும் குணம் கூறும்பொருளைச் சுருக்கிக்கூறுதல்; இஃது கூறும்பொருளுக்கு இன்றியமையாத சொற்களைமட்டும் தந்துகூறுதல்; எனவே "ஸம்மிதத்துவம்" என்பது பொருளைச் சுருக்கிக்கூறுதலன்றென்றவாறாயிற்று. ஆகவே இவ்விரண்டும் வேறுபடுமாறு தெளிவாம்.]

உதாரணம்:—

𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌿 𑌨𑍋𑌵𑌾𑌚𑌿 𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌵𑌾𑌚𑌿 𑌨𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 ।
𑌵𑌾𑌚𑌿 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇𑌨𑍍𑌯 𑌨𑌾𑌨𑍍𑌯𑍇𑌨𑍍𑌯 𑌵𑌾𑌚𑌿 𑌨𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 ॥

சில கவிஞர், பொருளையுணர்த்துவதில் திறம்பட்டவரும் சொல்நடையமைப்பதில் திறமையில்லாதவருமாவர். சிலர் சொல் நடையமைப்பதில் திறமுள்ளவரும் பொருளமைப்பதில் திறமில்லாதவருமாவர். வேறுசிலர் அவ்விரண்டிலும் திறம்பட்டிருப்பர்; மற்றுஞ்சிலர் அவ்விரண்டிலுமே திறம்பட்டிரார்.

இது, கூறும் பொருளுக்கு இன்றியமையாத சொற்களே யுடைமையால் "ஸம்மிதத்துவம்" என்னும் குணமுடையதாம்.

20. பாவிகம்.

𑌭𑌾𑌵𑌤𑍋 𑌵𑌾𑌕𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌾 𑌭𑌾𑌵𑌿𑌕𑌂 𑌤𑌦𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।

நல்ல கருத்துக்கொண்டு, அதனை வெளியிடுதற்குரிய தொடர்களால் வெளியிடின், அங்கு "பாவிகம்" என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

𑌏𑌹𑍍𑌯𑍇𑌹𑌿 𑌵𑌤𑍍𑌸! 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨! 𑌪𑍂𑌰𑍍𑌣𑌚𑌨𑍍𑌦𑍍𑌰!
𑌚𑍁𑌮𑍍𑌬𑌾𑌮𑌿 𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑌿 𑌚𑌿𑌰𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌜𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑍍 ।
𑌆𑌰𑍋𑌪𑍍𑌯 𑌵𑌾 𑌹𑍃𑌦𑌿 𑌦𑌿𑌵𑌾𑌨𑌿𑌶𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌾𑌮𑌿
𑌵𑌨𑍍𑌦𑍇𑌽𑌥𑌵𑌾 𑌚𑌰𑌣𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌕𑌦𑍍𑌵𑌯𑌂 𑌤𑍇 ॥

ரகுநந்தனனே! பூர்ணசந்திரனே! குழந்தாய்! வா, வா; உன்னை உச்சிமுகர்கிறேன்; இறுகத்தழுவிக்கொள்ளுகிறேன்; அல்லது அல்லும் பகலும் உன்னை என்மார்பின்மீதேற்றிவைத்துக் கொண்டு தாங்குகிறேன்; அல்லது உன்தாமரைபோன்ற அடிகளைத் தொழுகிறேன்.

இங்கே, உச்சிமுகர்வேன், தழுவிக்கொள்ளுவேன், தாங்குவேன், தொழுவேன் என எதிர்காலவினைச்சொற்களைத்தந்துகூறுது நிகழ்காலவினைச்சொற்களைத்தந்துகூறியிருப்பதும், முதலில் குழந்தாய் என்று விளித்துக் கூறிவந்ததற்கு மாறுகப் பின்பு உன் திருவடிக்கமலத்தைத்தொழுகின்றேன் என்று கூறியிருப்பதும்பொருந்தாதவையாய், கூறுவோனகத்துக் களிப்பின்மிகுதியை விளக்குதலால் இது "பாவிகம்" என்னும் குணமுடையதாயிற்று.

21. கதி.

கதிர்நாம க்ரமோ ய: ஸ்யாதாரோஹாவரோஹயோ: ॥ ௭௫ ॥

சொற்கள் ஒழுங்குபட ஏறி இறங்குதலே "கதி" என்னும் குணமாம்.

உதாரணம்:—

வாராஹ: கல்யாணம் விதரது ஸவோ யஸ்ய ஶஶப்ரு
த்கலாகோடீகாந்தம் க்ஷிதிஶ்ஶநைருத்த்ருத்யுத்தபியா ।
த்ரியஸ்ம்ஸ்ரோதஸ்ஸம்ப்ருஷ்டசதுரதிககல்லோலவடவே
ரநாஶ்லிஷ்டம் தம்ஷ்ட்ராஶிகரஶயி ஶேதே வஸுமதீ ॥

எந்த வராஹமூர்த்தியினுடைய சந்திரகலைபோல அழகிய பல்லின் நுனியில், பூதேவி, தூக்கியெடுத்தலாலுண்டாகிய பயத்தைச் சிறிதுசிறிதாக நீங்கியவளாய், நெருங்கி மோதுகின்ற நான்கிற்கு மேற்பட்ட கடலலைகளால் தொடப்பெறாது சயனித்திருந்தாளோ அந்தப்பெருமான் உங்களுக்கு மங்களமளிப்பாராக.

இந்தச்சுலோகத்தின் முற்பாதியில் ஒலி முறையே ஏறுவதாயும் பிற்பாதியில் முறையே அது இறங்குவதாயும் இருத்தலால், இது, "கதி" என்னும் குணமுடையதாம்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

மதுரை.